## முலட்டியன பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 19 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முலட்டியன பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொங்கல் கணக்கில் ரூபா 36,289 தொகையான ஆரம்ப செலவு மீதி நாட்குறிப்பு இலக்கம் 15 இன் மூலம் எவ்வித அடிப்படையுமின்றி திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் காணப்படுகின்ற ரூபா 958,295 தொகையான வங்கி வரவு வைத்தல்கள் நாட்குறிப்பு இலக்கம் 33 இன் மூலம் இனங்காணப்படாமல் திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணப் பெறுமதி ரூபா 3,887,170 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 5,653,920 தொகை கிடைத்திருந்தது. ரூபா 1,766,750 தொகையான மேலதிக பெறுவனவுகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 192,349 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் கிடைக்க வேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய கடை வாடகை. வுாடகை, சந்தை வாடகை ரூபா 578,073 தொகையான வருமானத்தின் பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டில் 09 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,531,652 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,746,476 ஆனமையால் ரூபா 214,824 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 269,168 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 95,519,394 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 123,543,049 பெறுமதியான 08 கணக்கு விடயங்களுக்கான சான்றுகள் இன்மையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,464,683 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 7,357,242 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 49 | 41 | 8 |
| (ii) | வாடகை | 2,649 | 2,563 | 86 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 582 | 766 | 184 |
| (iv) | ஏனைய வருமானம் | 12,247 | 6,279 | 5,968 |

### 2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 192,549 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,858,022 |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென் மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் மாதாந்த படிகள் செலுத்தும் போது உரிய மாதத்தில் நடத்தப்பட்ட சபைக் கூட்டங்கள் மற்றும் செயற்குழுக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்காத உறுப்பினர்களுக்கு படிகள் செலுத்த முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2012 ஆம் ஆண்டின் போது 11 சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத 11 உறுப்பினர்களுக்காக ரூபா 138,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென்மாகாண அபிவிருத்தித் திட்டம் 2012 இன் உறுப்பினர் நிதியேற்பாட்டின் கீழ் 02 அபிவிருத்தி பிரேரணைகளுக்காகக் கிடைத்த ரூபா 70,000 தொகை செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அந்தப் பிரதேச சபையின் தலைவர், உப தலைவரை உள்ளடக்கிய பன்னிரெண்டு உறுப்பினர்களினால் 2012 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 29 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 41 பேர் ஆகும். மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணியினர் சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகளாக ரூபா 8,490,950 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் சம்பளச் செலவினம் ரூபா 10,424,940 ஆனமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 1,933,990 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ஊழியர்கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,353,587 ஆக இருந்தது.

**2.6 செயற்பாடற்ற சொத்துக்கள்**

2008 ஆம் ஆண்டின் போது ரூபா 150,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிரீட் கலவை இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்